## காலி மரபுரிமை மன்றத்தின் - 2018

---

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

காலி மரபுரிமை மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக காலி மரபுரிமை மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட அடிப்படையில் அறிக்கைக்காக பாதகமான அபிப்பிராயமொன்று வழங்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, காலி மரபுரிமை மன்றத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

காலி மரபுரிமை மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் காலி மரபுரிமை மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின்

தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது தீர்மானங்கள் கணக்காய்வாளரின் அறிக்கை திகதி வரை பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையிலாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துச் செல்வது அவசியமாகவுள்ளது.

## 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் காணப்படும் கணக்குகள் மாதிரியின் பிரகாரம் உரிமை மூலதனத்தில் மாற்றங்ககள் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 66,497,881 ஆன கூட்டுத்தொகையொன்று மாத்திரம் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டிருந்தது. | உரிமை மூலதனத்தில் மாற்றங்ககள் கூற்று தயாரித்தல் எதிர்வரும் நிதிக்கூற்றுக்களுடன் சரியாக சமர்ப்பிப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இல் குறிப்பிடப்படும் தேவைப்பாட்டின் பிரகாரம் காசுப் ாய்ச்சல் கூற்றில் பின்வரும் விலகல்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஏனைய பெற வேண்டியவைகள், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 1,390,770 தொகை குறைவடைந்திருந்த போதிலும், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 227,236 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்றில் புள்ளி விபரங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுவத்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,435,609 ஆன நிலையான வைப்பு வட்டி பெறுவனவு காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு தொழிற்பாட்டின் வேறாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்குரிய வட்டி பெறுவனவு வைப்பின் மீது மீள் முதலீடு செய்யப் பட்டுள்ளதுடன் பௌதீக ரீதியில் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு தாக்க மொன்றை ஏற்படுத்தவில்லையென்தால் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்படவில்லை. | - மேற்படி - |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| சொத்துக்கள் கையேற்கப்படும் ஆண்டிற்கும் கையகற்றும் ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வுக் கொள்கை மற்றும் முதலீடு கணக்கீடு செய்யும் கொள்கை என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | காலி மரபுரிமை மன்றத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்விற்காக சொத்துக்கள் கையேற்கப்பட்ட திகதி முதல் அந்த வகைப் படுத்தலின் கீழ் வருடாந்த விகிதத்தை அடிப்படையாக கொண்டு செய்யப்படுகின்றது. கொள்கை எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு தொடர்பாக கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் |

### 1.5.4 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ரூபா 12,000,000 தொகையான நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டிற்குரிய வட்டி ரூபா 1,530,000 தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதன் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையான வைப்பு மூன்று ஆண்டுகளில் முதிர்வடைவதற்குரிய வைப்பொன்றாகும். குறித்த வட்டிச் சீராக்கம் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் திரட்டிய நிதியத்திற்கு செலலவு வைத்தல் மூலம் சீராக்கம் செய்வதற்கு குறித்து கொள்ளப்பட்டது. | ஆண்டிற்குரிய வட்டி அட்டுறு அடிப்படையில் ஆண்டின் வருமானத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் பணிக் கொடைக்கான ஒதுக்கீடு ரூபா 651,315 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இக்குறை ஒதுக்கீடு 2019 ஆம் ஆண்டின் திரண்ட நிதியத்திற்கு வரவு வைத்தமையால் சீராக்குவதற்கு தேவையான நடைமுறைகள் குறித்துக் கொள்ளப்பட்டது. | ஒதுக்கீடுகளின் சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 1,870,747 தொகையான கட்டிட திருத்தச் செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக காண்பிக்கப்படாமல் நிகழத்தக்க சொத்தாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிகழத்தக்க சொத்தின் கீழ் கட்டிட திருத்தத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் காட்டப்பட்டது தவறென ஏற்றுக்கொள்வதுடன் அது நிகழத்தக்க சொத்தாக சரி செய்யப்பட வேண்டும். இதன் பிரகாரம் இது சரியாக விடயங்களைக் குறிப்பிட்டு 2019 நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படும். | ஆண்டின் செலவினம் வருமானத்திற்கு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,063,583 ஆன இணங்காமை இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது. | இது தவறினை திருத்தம் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டது. குறித்த நாட்குறிப்பு பதிவுகள் கணக்குகள் தொகுதியில் காட்டப்பட்டுள்ளன. | தவறினை திருத்தம் செய்தல் முறையாக இனங்காணப்பட்டு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (உ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டிருந்த பெற வேண்டிய ஊழியர் கடன் கணக்கின் மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளுக்கு இடையே ரூா 113,594 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களுடன் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகள் அட்வணைகளுடன் ஒப்பீடு செய்து சரியான மீதியை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மன்றத்தின் காசேட்டின் பிரகாரம் வங்கி நடைறைக் கணக்கு மீதி பூச்சிய பெறுமதியொன்றை எடுத்திருந்த போதும் ஐந்தொகையின் பிரகாரம் வங்கி நடைறைக் கணக்கு மீதி ரூபா 1,056,213 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் காசேட்டிற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த சீராக்கம் தொடர்பான விபரங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பான திட்டவட்டமான விளக்கங்களை சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவும் தவறியிருந்தது. | இது தவறினை திருத்தம் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டது. குறித்த நாட்குறிப்பு பதிவுகள் கணக்குகள் தொகுதியில் காட்டப்பட்டுள்ளன. | குறித்த சீராக்கங்களின் விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (எ) | முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 4,712,294 ஆன சொத்துக்கள் மற்றும் ரூபா 3,236,142 ஆன பொறுப்புக்கள் தவறு சரிப்படுத்தல்களாகவும் ரூபா 4,381,075 ஆன இலாபத்திற்கு தவறுதலாக சீராக்கம் மீளாய்வாண்டிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் | கருத்துரை தெரிவிக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த குறைபாடுகளை சீராக்கம் செய்யப்பட வேண்டியதுடன் சரியான ஒப்பிடக்கூடிய மீதிகள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்த ஆரம்ப மீதிகள் சரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாமல் இருந்தது. | | |
| (ஏ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ஏனைய பெறவேண்டியவற்றிலிருந்து ரூபா 1,180,703 ஆன பெறவேண்டிய மீதிகள் எவ்வித அங்கீகாரம் இல்லாமல் திரண்ட நிதியிலிருந்து பதிவழிக்கப்பட்டமையால் நிதியம் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த நிதிக் தொகுதிக்காக முகாமைத்துவ சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தவறினை திருத்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த நாட்குறிப்பு பதிவுகள் கணக்கு தொகுதியல் காட்டப்பட்டுள்ளது. | திரண்ட நிதியிலிருந்து பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். தவறு சராக்கம் என்னவென்பது சரியாக இனங்காணப்பட்டு உரிய விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 39,553,151 | (i) நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு | சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் எதிர்காலத்தில் உங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்கள் மீதிகளுக்காக நாளதுவரையாக்கப்பட்ட சரியான நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| | | (ii) மெய்மையாய்வுச் சபை அறிக்கை | - மேற்படி - | |
| இருப்பு | 792,865 | (i) இருப்புப் புத்தகம்<br>(ii) விரிவான இருப்புப் பதிவேடு | - மேற்படி - | இருப்புப் புத்தகம், விரிவான இருப்புப் பதிவேடு, இருப்பு காலப்பகுப்பாய்வு |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) இருப்பு காலப்பகுப்பாய்வு | என்பவற்றை துரிதமாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| ஏனைய பெறவேண்டிய கணக்குகள் | 1,592,427 | (i) பெறவேண்டிய கணக்கிற்கான பதிவேடு<br>(ii) மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ்<br>(iii) காசுப்பகுப்பாய்வு | பெறவேண்டிய கணக்கு மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக சுட்டிக் காட்டப்பட்டுள்ள விபரங்களை சமர்ப்பிக்கப்பட செயற்பட வேண்டும். |

**1.5.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 137 | அங்கீகரிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுப்பெறுமதி ரூபா 2,359,565 பெறுமதியான 46 உறுதிச் சீட்டுக்கள் அங்கீகரிக்கப்படாமல் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த 46 உறுதிச் சீட்டுகளுக்குரிய விரிவான அட்டவணை யொன்று காலி மரபுரிமை மன்றத்தினால் வழங்குமாறு கோரப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் இது தொடர்பாக விபரங்களை குறிப்பிட எதிர்பார்த்துள்ளேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மன்றத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 168 (1) | எந்தவொரு உத்தியோகத்தருக்கும் அரசிற்காக பணம் கிடைக்கும் போது அவரால் குறித்த மாதிரியில் இயந்திரத்தின் மூலம் இலக்கமிடப்பட்ட அலுவலக பற்றுச்சட்டொன்று உடனடியாக வழங்கப்பட வேண்டியபோதும் ரூபா 869,085 கூட்டுத்தொகையான 35 வைப்புக்களுக்காக பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 35 வைப்புக்களுக்குரிய விரிவான அட்டவணையொன்று காலி மரபுரிமை மன்றத்தினால் வழங்குமாறு கோரப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் இது தொடர்பாக விபரங்களை குறிப்பிட எதிர்பார்த்துள்ளேன். | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2005 சனவரி 27 ஆந் திகதிய பீஎடீ/ 27 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2019 ஒக்தோபர் மாதம் 18 ஆந் திகதியே சமர்ப்பித்திருந்தது. | 2019 ஆம் ஆண்டில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட திகதியில் கணக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஎடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் | மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சில் நடைபெறும் கூட்டங்களுக்கு சமூகமளித்திருந்தமை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் மூலம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |
| (உ) | 1994 இன் 7 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் | மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பாக செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் பின்னர் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் | செயலாற்றல் அறிக்கை உரியய திகதிகளில் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 223,182 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,359,778 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 1,582,960 அதாவது 116 சதவீத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அமைச்சிலிருந்து கிடைத்த மானியங்கள் ரூபா 1,998,197 ஆல் அதாவது 19 சதவீதம் குறைவடைந்தமை ஏனைய வருமானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள வாடகை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 706,715 ஆல் அதாவது 39 சதவீதத்தினால் குறைவடைநதமைஇவ்வீழ்ச்சிக்கு தாக்கமளித்திருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்கு பகுப்பாய்வு

இது தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2014 ஆம் ஆண்டு முதல் முன்னைய ஆண்டு வரையிலும் நிதி விளைவுகளில் மிகையொன்று காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது பற்றாக்குறையொன்றாக மாறியிருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை கருத்திற் கொள்ளும் போது பங்களிப்பு 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2017 ஆண்டின் போதும் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 26 சதவீதத்தினாலும் 20 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் மற்றும் திரட்டிய மிகையாக இருந்ததுடன் விகிதம் 16 சதவீதமாக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது அது 22 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது அவ்விகிதம் 9 சதவீதம் வரை குறைவடைந்திருந்த போதும் மீளாய்வாண்டின் போது அப்பெறுமதி (2) சதவீதம் வரை மேலும் குறைவடைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சட்டத்தின் 5(1) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் நடவடிக்கைகள் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் என்பன முகாமைத்துவ சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் முகாமைத்துவ சபை நான்கு தடவையே கூடியிருந்ததுடன், முகாமைத்துவ சபை 26 அங்கத்தவர்களைக் கொண்டுள்ள போதும் அக்கூட்டங்களுக்காக அனைத்து அங்கத்தவர்களும் ஒரே தடவையில் சமூகமளித்திருக்க வில்லை. அவ்வாறே முகாமைத்துவ சபை உறுப்பினர்களுக்கு இடையே தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளரோ அல்லது அவரின் பெயரிடப்பட்டவர் மீளாய்வாண்டில் எவ்வித கூட்டமொன்றுக்கும் சமூகமளித்திருக்கவில்லை. | முகாமைத்துவ கூட்டம் நடாத்தப்படும் திகதிகள் தலைவரால் தீர்மானிக்கப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் 4 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. 2018.10.06 ஆந் திகதி நாட்டில் ஏற்பட்ட அரசியல் ஸ்திரமற்ற தன்மை அடிப்படையில் முகாமைத்துவ குழுவை கூட்ட முடியாமல் போயிருந்தது. | முகாமைத்துவ குழு கூட்டங்கள் குறித்துரைத்த படி நடாத்தப்பட வேண்டும். அனைத்து உறுப்பினர்களையும் இயலுமான வரை பங்குபெறச் செய்யப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) மன்றத்திற்கு கூடிய அதிகாரங்களை உரித்தாக்கு வதற்கும் மன்றத்திற்காக வருமான ஈட்டல் முறைமை யொன்றை செயற்படுத்தும் நோக்கத்திற்காக 1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற சட்டத்தினை திருத்தம் செய்யும் தேவைப்பாடு இனங்காணப்பட்டு அதற்காக 2015 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை விஞ்ஞாபன மொன்று தயாரிப்பதற்குரி மன்றத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் மன்றத்தினால் மேற்கொள்ள வேண்டிய கட்டமைப்பு ரீதியான வேறுபாடுகள் தொடர்பாக முகாமையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் காலி மரபுரிமை மன்றம் வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படாமையால் இங்கு காணப்படும் திருத்தங்களுக்காக அமைச்சின் ஆலேசனை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை முடியுமான வரை விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

-------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 முதல் காலாண்டின் போது கலாசார அலுவல்கள் அமைச்சினால் யுனெஸ்கோ அமைப்பிற்கு உலக மரபுரிமையான காலிக் கோட்டையை பாதுகாப்பது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முகாமைத்துவ திட்டத்தினை செயற்படுத்துவது தொடர்பாக பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் செயற்திட்ட அறிக்கைகளை தயாரிப்பதற்குரிய மன்றத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் மன்றத்தில் மேற்கொள்ள வேண்டிய கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பாதுகாப்பு அறிக்கைகள் தயாரித்தல் இவ்வாண்டில் தெரிவுசெய்யப்பட்ட 06 கட்டிடங்களுக்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எஞ்சிய ஆண்டுகளிலும் இதனை செயற்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) யுனெஸ்கோ அமைப்பினால் காலிக் கோட்டை உலக மரபுரிமையாக பெயரிடப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் காலி கோட்டையினை பாதுகாப்பதற்காக யுனெஸ்கோ அமைப்பிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முகாமைத்துவ திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் யுனெஸ்கோ அமைப்பின் வழிகாட்டிகளுக்கும் (Guidelines) இணங்க செயற்படுத்துவதற்கும் காலி மரபுரிமை மன்றத்தின் முகாமைத்துவம் தவறியிருந்தது. | முகாமைத்துவ திட்டத்தை செயற்படுத்துவதற்கு கையளிக்கப்பட்டுள்ள கடமைகளை முறையாக செயற்படுத்துவதற்கு யுனெஸ்கோ அமைப்பினால் பரிந்துரைத்ததன் பிரகாரம் தகைமையுடைய பதவியணியினர் காலி மரபுரிமை மன்றத்தின் கீழ் கடமை புரிய வேண்டும். உத்தேச பதவியணியினர் தற்போதய அமைச்சின் கீழ் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் காலிக் கோட்டையினுள் தற்போது இனங்காணப்பட்டுள்ள அனுமதியற்ற 22 நிர்மாணங்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு முகாமைத்துவ சபை தவறியிருந்தது. மேலும் அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்காக காலி மரபுரிமை மன்றத்திற்கு சட்டரீதியான ஏற்பாடு இல்லாதிருந்ததுடன் தொடர்புடைய ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் அதற்காக துரிதமாக ஈடுபடும் இயலுமையும் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இவ்வாறான நிலைமைக்கு காலி மரபுரிமை மன்றம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தடையாக இருந்தது. | தற்போதும் அனுமதியற்ற நிர்மாணங்களை அப்புறப்படுத்துவதற்காக 36 நீதிமன்ற செயற்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. | அனுமதியற்ற நிர்மாணங்களை அப்புறப்படுத்துவதற்காக உரிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2006 இன் 1.3.2 ஆம் பிரிவின் பிரகாரம் பண வழங்கல் மூலதாரத்தை கருத்திற் கொள்ளாமல் இவ்வழிகாட்டிக் கோவை அனைத்து பெறுகைகளுக்கு உரித்தான போதும் ரூபா 589,658 தொகையான 05 கொள்வனவுகளுக்காக பெறுகை வழிகாட்டி பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | V18/01/01<br><br>தலைவரின் அங்கீகாரத்தின் கீழ் தம்றோ நிறுவனத்திடம் மேற்கூறப்பட்ட கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது | பெறுகை வழிகாட்டிக் கோவையின ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | V18/03/17<br><br>2017 திசெம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்ட விலையை விட குறைந்த விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டது.<br><br>V18/05/06<br><br>சரியான பெறுகை நடைமுறையொன்றின் கீழ் மேற்படி சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.<br><br>V18/09/26<br><br>இலேபெரும மோட்டார் வாகன நிறுவனம் காலி மாவட்ட செயலக வழங்குனர்களின் பதிவேட்டின் படி தெரிவு செய்யப்பட்டது. | |
| (ஆ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2006 இன் 2.11.3 (அ) ஆம் பிரிவின் பிரகாரம் குழுவின் கூட்டங்களில் அறிக்கை பெறுகை கைநூலில் அடங்கியுள்ள குறிப்பான மாதிரியின் பிரகாரம் அறிக்கையிடப்பட வேண்டியதுடன் அது வருகை தந்திருந்த அங்கத்தவர்களினால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பெறுகை தீர்மானங்கள் அங்கத்தவர்களின் சான்றுதிப்படுத்தாமல் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | | ஏற்றுக்கொள்கின்றேன். குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் அங்கத்தவர்களின் இணக்கத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்டது. எனினும் குறித்த தீர்மானங்கள் பெறுகை தீர்மானங்கள் அறிக்கையிடும் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டு கையொப்பம் பெற்றுக்கொளவதில் தாமதம் இடம் பெற்றுள்ளது. எதிர் காலத்தில் அவ்வாறான தாமதங்கள் ஏற்படாமல் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) காலிக் கோட்டையை பார்வையிடுவதற்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக மலசலகூட தொகுதியொன்றை நிர்மாணித்தல், வெள்ளை மடத்தின் கண்காட்சி மேடையின் பாதுகாப்பு செயற்பாடுகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 14,800,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் மலசலகூட | | கருத்துரை தெரிவித்திருக்கவில்லை. | சுற்றுலா பயணிகளைக் கவர்வதற்காக அவர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் எடுக்க வேண்டிய செயற் |

| | | | |
|---|---|---|---|
| | தொகுதியின் செயற்பாடுகள் மற்றும் வெள்ளை மடத்தின் கண்காட்சி மேடையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், தகவல் நிலையத்திற்காக ரூபா 1,030,129 தொகை செலுத்தி தளபாட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதனை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | | பாடுகளை துரிதமாக செயற்படுத்த வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிர்வாக உத்தியோகத்தர் உட்பட 07 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக 2006 சனவரி 02 ஆந் திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் பெண் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு வரையிலும் வருடாந்தம் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு வரப்பட்டிருந்தது. | நிர்வாக உத்தியோகத்தர் இப்பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கும் நாட்டில் காணப்பட்ட அரசியல் ஸ்திரமற்ற தன்மை அடிப்படையில் அமைச்சு மாற்றமடைந்தமையாலும் காலி மரபுரிமை மன்றத்தின் பணிப்பாளர் பதவிகள், தலைவர் பதவி வெற்றிடமாக இருந்த நிலைமையில் நிறுவகத்தின் பாதுகாப்பு மற்றும் நடாத்திச் செல்லும் தேவைப்பாடு கருத்திற் கொண்டு நிர்வாக உத்தியோ கத்தரை பதவியில் நிறுத்திவைக்க நேர்ந்தது. | வெற்றிடங்களை முறையாக நிரப்புவதற்கு எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 06 அபிவிருத்தி உதவியாளர் பதவிக்காக உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இருக்கின்ற மூன்று கலாசார உத்தியோகத்தர்கள் காலி மரபுரிமைகள் மன்றத்தின் செயற்திட்ட உதவி உத்தியோகத்தராக 2006 ஆம் ஆண்டிலிருந்து இணைக்கப்பட்டிருந்தனர். | தற்போது இந்நிறுவனம் கலாசார திணைக்களத்திற்கு உரித்தாகின்றது. அதன் பிரகாரம் மூன்று உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். காலி கோட்டைக்காக யுனெஸ்கோ நிறுவனத்தின் மூலம் முகாமைத்துவ திட்டமொன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பதவியணியினரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட பதவி யணியினரை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |